*25*

# புறஜாதியாரின் மத்தியில் பவுலின் ஊழியப்பயணங்கள், கி.பி. 45–58

*அப். 13-21:26*

## I. முதலாம் பயணம்.

### (அப். 13, 14.)

***1. ஊழியத்தின் அவசரம்.***—அந்தியோகியாவில் பவுலும் பர்னபாவும் ஓராண்டுக் காலம் ஒன்றாய் ஊழியம் செய்திருந்தார்கள். சபையானது எண்ணிக்கையில் பெரிதும் வளர்ச்சியுற்றிருந்தது, அதிலும் முக்கியமாக ஆவிக்குரிய வகையில் அதிகம் வளர்ச்சியுற்றிருந்தது. வறுமையிலிருந்த யூத சகோதரர்களுக்கு ஒரு நிதியளிப்புடன் அவர்கள் பர்னபாவையும் சவுலையும் எருசலேமுக்கு அனுப்பிய நிகழ்ச்சியில் அதன் (சபையின்) தாராள குணம் காண்பிக்கப்பட்டிருந்தது (அப். 11:27-30). அதில் போதகர்கள் நிறைந்திருந்தனர் (அப். 13:1), அவர்களுள் பர்னபா முதலாமவராகவும் சவுல் கடைசியானவராகவும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். மிகப் பரந்த அளவிலான சுவிசேஷ ஊழியம் (செய்யும் கருத்து) அவர்களின் இருதயங்களில் இருந்ததென்று காணப்படுகின்றது; ஏனெனில், “அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்.”[1] உபத்திரவத்தின் புறம்பான சக்தியினால் எருசலேம் ஒரு ஊழிய மையமாயிற்று; பரிசுத்த ஆவியானவரின் உள்ளான விசையினால் அந்தியோகியா ஒரு ஊழிய மையமாயிற்று.

***2. சீப்புரு(தீ)வுக்கு வருதல்.***—பர்னபாவின் சொந்த நாடும், பிரதான/முதன்மையான பகுதியிலிருந்து பார்வைக்கு எட்டிய நாடுமாக இருந்த சீப்புரு(தீ)வே தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் (ஊழியக்) களமாயிருந்தது. எருசலேமில் இருந்து திரும்பியிருந்த யோவான் மாற்கு (அப். 12:25) அவ்வூழியர்களுடன் சென்றார். அந்தத் தீவின் கிழக்கு முனையில் இருந்ததும், கிரேக்கர்களின் பழைய தலைநகருமான சாலமியில் பிரசங்கித்த பின்னர் அவர்கள், தீவின் மேற்கு முனையில் இருந்ததும்,

*ரோமர்களின் தலைநகருமான பாப்போவுக்குக் கடந்து சென்றனர். இங்கு ரோம ஆளுநரான செர்கியு பவுல் ஒரு விசுவாசியானார். (ஆனால்) அவரது மனமாற்றமானது பர்இயேசு என்ற பெயர் கொண்ட யூத மந்திரவாதி ஒருவரால் தடை செய்யப்பட்டது. இந்த பிரச்சனையின் சூழ்நிலையில் சவுல் முன்னணி வகிக்கிறார். தெய்வீக ஏவுதலின் உணர்வும், அப்போஸ்தலிக்க வல்லமையும் கொண்டுள்ளதை அறிந்த அவர் அந்த வஞ்சகனிடம் திரும்பி இருளாக்கும் கடிந்து கொள்ளுதலுடன், அவரின் மாய்மாலத்தின்மீது தெய்வீக நியாயத்தீர்ப்பாக உடனடியான பார்வையற்றுப் போகுந்தன்மையை அறிவித்தார். இந்த வேளையிலிருந்து சவுல், பவுல் என்று அழைக்கப்படுகின்றார், மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட நடத்துனராகின்றார்.*

***3. ஆசியா மைனர் பகுதியில் பயணம்.***—*ஊழியர்கள் அடுத்ததாக ஆசியா மைனர் பகுதியின் திசை நோக்கித் தங்கள் முகங்களைத் திருப்பினார்கள். பவுல் தனது சொந்த மாகாணமாகிய சிலிசியாவில் பல ஆண்டுகளாகத் தங்கியிருந்திருந்தார். இப்பொழுது அவர்கள் சென்ற மாகாணங்கள் சிலிசியாவுக்கு வடக்கிலும் மேற்கிலும் அமைந்திருந்தன. பெர்கே துறைமுகத்தில் யோவான் மாற்கு, ஊழியத்தைக் கைவிட்டு எருசலேமுக்குத் திரும்பிச் சென்று விட்டார். பவுலும் பர்னபாவும் தொடர்ந்து பயணித்து, பண்பட்டிராத மலை மாவட்டங்களினூடே “ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், அவர்களின் சுய ஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும்” (2 கொரி. 11:26) சுற்றி வளைக்கப்பட்டாலும் தொடர்ந்து ஊழியத்தில் ஈடுபட்டனர். அவர்கள், பிசீதியாவின் அந்தியோகியா, இக்கோனியம், லீஸ்திரா மற்றும் தெர்பை ஆகிய இடங்களை வரிசையாகச் சென்று அடைந்து மீண்டும் அதே வழியில் திரும்பி வந்தனர். அந்தியோகியாவில் பவுல் தனது முதல் விரிவான பிரசங்கத்தை அங்கிருந்த ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார். யூதர் கூட்டத்தினால் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அவர் புறஜாதியாரிடத்திற்குத் திரும்பினார். “முன்பு யூதருக்கும் பின்பு கிரேக்கருக்கும்” (ரோமர் 1:16),—இப்படிப்பட்டதே எல்லா இடத்திலும் ஒழுங்கு முறையாய் இருந்தது. எல்லா இடத்திலும் அவர்களின் ஊழியத்தில் மனமாற்றங்களும் பாடுகளும் நிறைந்திருந்தன. லீஸ்திராவில் பவுல் ஒரு சப்பாணியைக் குணமாக்கியிருந்தார், அங்கு அவர்கள், மூடநம்பிக்கை கொண்ட புறதெய்வ வழிபாட்டாளர்களால் முதலில் தேவர்கள் என்று ஆராதிக்கப்பட்டு, பிறகு இக்கோனியத்தில் இருந்து வந்திருந்த யூதர்களின் தூண்டுதலினால் பவுல் கல்லெறியப்பட்டு மரிக்கும்படி விட்டு விடப்பட்டார். புதிய உலகம் ஒன்றைக் கண்டறிந்த கண்டு பிடிப்பாளர்கள் போல் சந்தோஷத்தினால் ஏற்பட்ட மனக்கிளர்ச்சியுடன் அந்தியோகியாவுக்குத் திரும்பிய அவர்கள் தங்களை அப்பயணத்திற்கு அனுப்பியிருந்த சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தார்கள்.*

## II. இரண்டாம் பயணம்.

## *(அப். 16-18:22.)*

***1. இடைவேளை; எருசலேமில் ஆலோசனை.***—புதிய (சூழ்)நிலைகள் புதிய கேள்விகள் எழுவதற்குக் காரணமாகின்றன. சபையானது தன் யூதத்துவ நிலைக்குப் புறம்பே வெகுவாக வளர்ந்து கொண்டுள்ளது. ஆனால் யூதத்துவக் கிறிஸ்தவர்களோ சுவிசேஷத்தின் மேன்மைமிக்க உலகளாவிய தன்மைக்கு மிக மெதுவாகவே உயர்ந்து கொண்டிருந்தனர். புறஜாதியார் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதினால் சபைக்குள் பிரவேசித்தல் பற்றிய கேள்வியானது கொர்நேலியுவின் (வீட்டாரிடத்தில்) நடந்த நிகழ்ச்சியினால் தீர்த்து வைக்கப்பட்டது. ஆனால், அவர்கள் (புறஜாதியார்) விருத்தசேதனம் செய்விக்கப்பட்டு யூதராக வேண்டாமா? கிறிஸ்தவம் என்பது யூதத்துவத்தின் ஒரு புதிய மற்றும் திருத்திய பதிப்பாக இல்லையா? எனவே எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்கு வந்த சிலர் இவ்விதமாய் வாக்குவாதம் செய்தனர். அங்கு எழுந்த கேள்வி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது; இது அந்தியோகியாவில் இருந்த சபையின் சமாதானத்திற்குப் பயமுறுத்துதலாயிருந்ததுடன், ஊழியர்களின் எதிர்காலப் பிரயாசங்களிலும் ஆழ்ந்த வலுவான செயல்பாடுகள் கொண்டுள்ளதாய் இருந்தது. ஆகையால், பவுலும் பர்னபாவும் இந்தக் கேள்வியுடன் எருசலேமுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு யாக்கோபு தலைமையேற்று நடத்திய ஒரு ஆலோசனைக் கூட்டத்தில், பேதுரு, பவுல் மற்றும் பர்னபா ஆகியோரும் பங்கேற்றிருக்க அந்தக் கேள்வியானது சுயாதீனத்திற்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டது. அது வேறு விதமாக முடிவு செய்யப்பட்டிருந்தால், கிறிஸ்தவமானது தனது தொட்டிலிலேயே அழிந்திருக்கும்.

**2. பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம்.**—இந்த ஆலோசனைக் கூட்டம் முடிந்த சில நாட்களுக்குப் பின்பு பவுல் தாங்கள் நிலைநாட்டியிருந்த சபைகளை மீண்டும் சென்று பார்வையிடத் திட்டமிட்டு பர்னபாவிடம் சொன்னார். பர்னபா தனது உறவினரான மாற்குவை (கொலோ. 4:10) மீண்டும் அழைத்துச் செல்ல விரும்பினார்; ஆனால் அவர் (மாற்கு) முந்தியப் பயணத்தில் இடையிலேயே தங்களைக் கை விட்டு வந்து விட்டபடியால் பவுல் அவர்(மாற்கு)மீது நம்பிக்கை கொள்ளாதிருந்தார். அப்பொழுது ஏற்பட்ட விவாதமானது பவுலும் பர்னபாவும் பிரிந்து செல்லுமளவுக்கு மிகவும் கூர்மையானதாயிருந்தது. (ஆயினும்) பிற்காலத்தில் மாற்கு மீண்டும் பவுலின் நம்பிக்கைக்குரியவரானார் என்பதை அறிவது மனதிற்கு மகிழ்ச்சியாய் உள்ளது (2 தீமோ. 4:11).

***3. ஆசியா மைனர் பகுதிக்கு இரண்டாம் முறை செல்லுதல்.***—பவுலும் பர்னபாவும் (எருசலேமில் நடந்த) ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின் திரும்பி வருகையில் சீலாவும் அவர்களுடன் சேர்ந்து வந்தார். அவரைப் பவுல் தமது பயணத் துணைவராகத் தேர்ந்து கொண்டு, சீரியா சிலிசியா நாடுகளினூடாகக் கடந்து சென்று சபைகளுக்குச் செல்லும்படி தாம் முன் மொழிந்திருந்த பயணங்களை நிறைவேற்றினார். அவர் லீஸ்திராவில்

*தீமோத்தேயு என்னும் பெயர் கொண்ட இளம் சீஷர் ஒருவரைக் கண்டார். அவரது (தீமோத்தேயுவின்) தந்தை ஒரு கிரேக்கராயிருந்தார்; ஆனால் அவர், தனது தாயான ஐனிக்கேயாள், தனது பாட்டியான லோவிசாள் ஆகியோ ரால் தெய்வ பக்தியுள்ளவராக வளர்க்கப்பட்டிருந்தார் (2 தீமோ. 1:5). அவர் பவுலின் முதல் பயணத்தில் அவரால் (பவுலினால்) மனம் மாற்றப்பட்டவர் என்பதில் ஐயமில்லை; மற்றும் பவுல் லீஸ்திராவில் கல்லெறியப்பட்டதை அவர் பார்த்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. பவுல் சுயத்தை மறுக்கும் பிரயாசத்தினாலான தமது சொந்த வாழ்வுடன் இளம் வாலிபர்களைப் பலமாய் இணைத்துக் கொண்டார் என்பது அவரது குண நலனில் இருந்த மிகவும் அழகுமிக்க பண்புகளில் ஒன்றாக இருந்தது; மற்றும் இந்த வேளையிலிருந்து தீமோத்தேயு பவுலின் மிக நெருங்கிய உடன் ஊழியரானார்.*

*ஆனால் பவுல், ஏற்கனவே நிலைநாட்டியிருந்த சபைகளை மீண்டும் பார்வையிடுதல் என்பதை விடப் பெரிய திட்டங்கள் கொண்டிருந்தார்; எனவே அவர் பிரிகியா மற்றும் கலாத்தியா ஆகிய பகுதிகளில் புதிய ஊழியங் களில் வெற்றியடையும்படி செயல்படுவதை வலிந்து நிறைவேற்றினார். தேவனோ, பவுல் தமக்கென்று கொண்டிருந்ததைக் காட்டிலும் மிகப் பெரிய திட்டங்களை அவருக்கென்று வைத்திருந்தார்; பவுலின் வலது மற்றும் இடது புறத்தில் வேலியிட்டுப் பாதுகாத்த தேவன் அவரை துரோவாவுக்கு வழிநடத்தினார். அங்கு அவர் ஒரு தரிசனம் கண்டார், அதில் மக்கெ தோனியா தேசத்து மனிதர் ஒருவர் அவருக்குத் தோன்றி, "நீர் மக்கெ தோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்"[2] என்று கேட்டுக் கொண்டார். துரோவாவில் பவுல் நின்ற வேளையில் அது ஒரு பிரசவ வேளையைப் போன்றிருந்தது. அவருக்குப் பின்னால் ஆசியா தன் வலிமை வாய்ந்த கடந்த காலத்துடன் கிடந்தது; அவருக்கு முன்னால் ஐரோப்பா இருந்தது; அதன் தென்முனையில் நிகழ்காலத்தின் சகல வல்லமை நிறைந்த தன்மையின் உருவமாக ரோமாபுரி இருந்தது; அப்பகுதிகளில் வடக்கிலும் மேற்கிலும் திரளாய் இருந்த பண்படாத மனிதர்கள் தங்கள் இடைகளில் இன்னும் வலிமை வாய்ந்த எதிர்காலம் கொண்டவர்களாய் இருந்தனர். ''உங்கள் துப்பாக்கிகளை ஐரோப்பாவை நோக்கித் திருப்புங்கள். எதிர்காலத்தை வெற்றி கொள்ளுங்கள்.''*

***4. ஐரோப்பாவில் சுவிசேஷம் நாட்டப்பட்டது; பிலிப்பியில் தொடக்கம்.***—*துரோவாவில் லூக்கா பவுலுடன் இணைந்து கொண்டார். இது "நாங்கள்" என்று கூறப்படும் பகுதிகளினால் காண்பிக்கப்பட்டுள்ளது. நெயோப்போலிக்குக் கடற்பயணம் சென்ற ஊழியர்கள் அம்மாவட்டத் தின் முதன்மை நகரான பிலிப்பி நகருக்குச் சென்றனர். பிலிப்பி ஒரு வர்த்தக நகரல்ல ஆனால் இராணுவ நகராயிருந்தது, எனவே அங்கு ஒரு சில யூதர்கள் மட்டும் இருந்தனர், அங்கு ஜெப ஆலயம் இல்லை. ஆனால் பெண்களால் ஆன சனிக்கிழமை ஜெபக் கூட்டம் ஆற்றங்கரையில் நடைபெற்றது, அதில் பவுல் கலந்து கொண்டார். ஐரோப்பாவில் கிறிஸ்தவமானது தனது மறுபிறப்பளிக்கும் ஊழியத்தை ஆற்றங்கரையில் நடந்த ஜெபக் கூட்டத்தில் தொடங்கியது, வர்த்தகம் செய்யும் லீதியாள் என்ற பெண் அதன்*

முதற்கனியானாள். விரைவிலேயே ஊழியர்கள் (தங்களுக்குப் பின்னாக வந்து) தெருவில் உரத்த சத்தமிட்டுக் கொண்டிருந்த அசுத்த ஆவி கொண்ட அடிமைப் பெண்ணொருத்தியினால் வரவேற்கத் தகாத விளம்பரம் ஒன்றைப் பெற்றனர். அந்தப் பெண்ணிடத்திலிருந்து அசுத்த ஆவியைத் துரத்தியதாலும், அதன் மூலம் அவளது எஜமானரின் ஆதாயத்தை அழித்துப் போட்டதாலும் பவுலும் சீலாவும் (சவுக்கினால்) அடிக்கப்பட்டு சட்டத்திற்குப் புறம்பான பழக்க வழக்கங்களை அறிமுகப்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். (அங்கு) இரவில் அவர்களின் பாடல்களும், சிறைக் கதவுகளை விரியத் திறக்கச் செய்த பூமியதிர்ச்சியும், புற தெய்வ வழிபாட்டாளரான சிறைக் காவலரை அவர்கள் முன்பாக மண்டியிடச் செய்தது; மற்றும் பொழுது புலரு முன்பே அவரும் (சிறைக் காவலரும்) அவருடைய வீட்டார் யாவரும் ஞானஸ் நானம் பெற்ற விசுவாசிகளாகி தேவனுக்குள் மன மகிழ்வடைந்தார்கள்.

***5. பிலிப்பியிலிருந்து அத்தேனே பட்டணத்திற்கு.***—புதிதாய்ப் பிறந்திருந்த (பிராந்திய) சபையைக் கவனித்துக் கொள்ளும்படி லூக்காவையும் ஒருவேளை தீமோத்தேயுவையும் அங்கு விட்டு விட்டு, அவர்கள் மேற்கு நோக்கி, கருங்கடலையும் ஆதிரியாக் கடலையும் இணைத்த மாபெரும் இராணுவ சாலையான எக்னேஷியா வழியாகப் பயணமானார்கள். அம்பிபோலி மற்றும் அப்போலோனியா பட்டணங்களை கடந்து சென்று, அவர்கள் மெக்கெதோனியாவின் பெருநகரான தெசலோனிக்கே என்ற நகருக்கு வந்தனர். இங்கு பவுல், "தனது வழக்கத்தின்படியே"[3] ஜெப ஆலயத்தில் பல ஓய்வு நாட்களில் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்தார். ஒரு சில யூதர்களும், திரளான கிரேக்கர்களும் விசுவாசித்தனர்; ஆனால் விசுவாசியாத யூதர்கள் அவர்கள் வழக்கத்தின்படியே துன்புறுத்துதலின் புயலொன்றை எழுப்பினார்கள், அதற்கு முன்னதாகவே ஊழியர்கள் பெரோயாவுக்குத் தப்பியோடி விட்டனர். பெரோயா பட்டணத்திலிருந்த யூதர்கள் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தபடியினால் தெசலோனிக்கேயில் இருந்தவர்களைக் காட்டிலும் நற்குணசாலிகளாய் இருந்தனர். இதன் விளைவாக யூதர்கள் மற்றும் கிரேக்கர்களில் ஏராளமான வர்கள் மனமாற்றம் அடைந்தார்கள். தொடர்ந்து வலியுறுத்தும் தகுதியுடைய மிக மேன்மையான காரணத்திற்காக தெசலோனிக்கேயின் யூதர்கள் பவுலைத் தொடர்ந்து பின்பற்றி பெரோயாவுக்கும் வந்தனர். பவுல் கடல் வழியே அத்தேனே நகருக்குப் பயணமானார்.

***6. அத்தேனேயில் பவுல்.***—அத்தேனே நகரானது தலை சிறந்த வரலாற்றில் செயல்பட்டது போல் தெளிவாய்க் காணக் கூடிய வகையில் கிறிஸ்தவத்தில் செயல்படவில்லை. இருப்பினும், பழங்காலத்திய மகிமைகளைக் கொண்டிருந்த அத்தேனே நகரம் சிலுவையில் மிகுந்த ஆவிக்குரிய மகிமைகளை முதன் முதலாக எதிர்கொண்ட வேளையானது மிகவும் ஆழமான ஆர்வத்திற்குரியதாயிருந்தது. பவுல் அத்தேனேயில் தம்முடன் வந்து இணைந்து கொள்ளும்படி சீலாவுக்கும் தீமோத்தேயுவுக்கும் தகவல் அனுப்பியிருந்தார். அதே வேளையில் அவரைச் சுற்றிலுமிருந்த ஆடம்பரமான விக்கிரகாராதனையானது அவரது ஆவியை வைராக்கியம்

அடையச் செய்தது, மற்றும் அவர் யூதருடைய ஜெப ஆலயத்திலும் அகோரா அல்லது நகரின் பொது கூட்டம் நடைபெறும் இடத்திலும் புதிய விசுவாசத்தை முன் வைத்தார். சில தத்துவ ஞானிகளின் ஆர்வம் எழுப்பப் பட்டது, மற்றும் அவர்கள் பவுலை அரியோபேகஸ் (மார்ஸ் மேடை) என்னும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர், அங்குதான் அத்தேனே நகரின் மிகுந்த மரியாதைக்குரிய நீதிமன்றம் கூடி அமர்ந்தது. வரலாற்றுத் தொடர்புகளில் அவ்வளவு வளம்மிகுந்ததான அவ்விடத்தில் பவுல் நிபுணத்துவம் வாய்ந்த தமது உரைகளில் ஒன்றை எடுத்துரைத்தார். இது அவரிடமிருந்து நமக்கு வந்துள்ள இரண்டாவது உரையாக உள்ளது. தங்கள் நாட்டு வரலாறு மற்றும் மேன்மைமிக்க தீர்க்கதரிசனங்கள் ஆகியவை பற்றி கர்வம் கொண்டிருந்த யூதர்களுக்கு அந்தியோகியாவின் ஜெப ஆலயத்தில் பிரசங்கிக்கப்பட்ட முதல் செய்திக்கும் (அப். 13:16-41), எல்லாக் காலத்திலும் மிகவும் அற்புதமான கலை நுணுக்கத்தின் முன்னிலையில் நயப்பட்டிருந்த கிரேக்கர்களுக்கு அத்தேனேயின் மார்ஸ் மேடையில் பிரசங்கிக்கப்பட்ட (இந்த) இரண்டாவது பிரசங்கத்திற்கும் இடையில் வலிவான நேர்மாறுகள் உள்ளன. ஆனால், விவாதமும் அணுகுமுறையின் வரிசையும் மாறுபட்டிருப் பினும், முடிவு என்பது ஒரே மாதிரியானதாகவே இருந்தது—கிறிஸ்துவும் அவர் சிலுவையில் அறையப்படுதலும், கிறிஸ்துவும் உயிர்த்தெழுதலைப் பிரசங்கிப்பதற்கும். ஆனால் யூதர்கள் தங்கள் பாரம்பரியத்துடன் பின்னிப் பிணைந்திருந்தது போலவே கலாச்சாரப் படுத்தப்பட்டிருந்த அத்தேனே நகரத்தார், தங்கள் தத்துவங்களுடன் பின்னிப்பிணைந்திருந்தனர். இருப்பினும் மார்ஸ் மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவரான தியோனீசியு என்பவரும் தாமரி என்னும் பெயர் கொண்ட பெண்ணும் உள்ளிட்ட ஒரு சிலர் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தப்பட்டனர். தீமோத்தேயு அத்தேனேயில் பவுலுடன் சேர்ந்து கொண்டார் என்பது அவரால் (பவுலினால்) அவர் (தீமோத்தேயு) தெசலோனிக்கே நகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டார் என்பதும் அப். 17:15, 16 மற்றும் 1 தெச. 3:1 ஆகியவற்றின் ஒப்பீட்டிலிருந்து தெளிவாகின்றது. அத்தேனே நகர் என்பது பவுல் துன்புறுத்தப்படாத நகரங்களில் ஒன்றாக இருந்தது; ஆனால் அது கனியற்ற களமாகவும் இருந்தது, அவர் விரைவிலேயே கொரிந்து நகருக்குத் திரும்பினார்.

**7. கொரிந்துவில் பவுல் நீண்ட நாட்கள் சஞ்சரித்தல்.**—பவுலின் நாட்களில் கிரேக்க நாட்டில் அத்தேனே பட்டணம் (இன்றைய தமிழகத் தின்) மதுரையைப் போன்றும், கொரிந்து பட்டணம் (இன்றைய தமிழகத் தின்) சென்னையைப் போன்றும் இருந்தன. இந்த மாபெரும் வர்த்தகப் பெருநகரில் பவுல் பயத்துடனும் நடுக்கத்துடனும் பிரவேசித்தார் (1 கொரி. 2:3). அவர் அத்தேனேயில் ஒப்பீட்டளவிலான தமது தோல்வியினால் மதிப்பு குறைந்தவராக நினைத்துக் கொண்டார். அவர் பணம் இல்லாதவராகவும் தனியாளாகவும் ஆனார். அவர் தமது அன்றாட உணவைப் பெறுவதற்கு கூடாரம் செய்தல் என்ற தமது தொழிலில் கடமையாற்ற அடைக்கலம் புக வேண்டியதாயிற்று. ஆனால் பவுல் நண்பர்களைக் கண்டறிவதிலோ அல்லது நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வதிலோ ஒருக்காலும் காத்திருந்ததில்லை.

விரைவிலேயே அவர் தமது சக தொழிலாளிகளான ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள் ஆகியோர் தம் மனதிற்கு இசைந்தவர்களாய் இருக்கக் கண்டார், அவர்கள் (ஒருவேளை) ஏற்கனவே சீஷர்களாயிராதிருப்பினும் விரைவிலேயே சீஷர்களாயினர். அவர்களுடன் வாரம் முழுவதும் வேலை செய்து விட்டு ஓய்வு நாட்களில் ஜெப ஆலயத்தில் அவர் பிரசங்கித்தார். பிலிப்பியிலிருந்து நன் கொடையுடன் சீலாவும் தீமோத்தேயுவும் வந்த பொழுது, அவரது கைகள் (வேலையிலிருந்து) விடுதலையாகின, அவர் ஒன்றரை வருட காலம் முழுவதிலும் ஊழியத்தின் மாபெரும் வல்லமைக்கு தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்தார் (இ.வ. அப். 18:5, 9, 10; பிலி. 4:15). தீமோத்தேயுவின் வருகைக்குப் பின் வெகு விரைவிலேயே அவர் தெசலோனிக்கேயருக்கான தமது முதல் நிருபத்தை எழுதினார் (1 தெச. 3:6) சற்றுப் பிறகு இரண்டாம் நிருபத்தையும் எழுதினார். இவைகளே பவுலிடத்திருந்து நமக்கு வந்துள்ள தொடக்க நிருபங்களாகும்.

***8. அந்தியோகியாவுக்குத் திரும்புதல்.***—கொரிந்துவையும் கெங்கி ரேயாவையும் இணைக்கும் நிலப்பகுதியைப் பவுல் ஆக்கில்லாவுடனும் பிரிஸ்கில்லாளுடனும் கடந்த பிறகு, எபேசுவுக்குக் கடல் மார்க்கமாய்ப் பயணமானார். இங்கு ஜெப ஆலயத்தில் அவர் பிரசங்கித்ததானது அவர் அங்கேயே தங்கியிருப்பதை விரும்புமளவுக்கு அவரைக் கேட்டவர்களின் இருதயங்களை அடிமைப்படுத்திற்று; ஆனால் திரும்பி வருவதான ஒரு வாக்குறுதியை அவர்களுக்கு அளித்து விட்டு, அவர் செசரியாவுக்கும் பின் அங்கிருந்து அந்தியோகியாவுக்கும் அவசரமாய்ப் புறப்பட்டார். இவ்வாறாகப் பவுலின் பரந்து விரிந்த இரண்டாம் பயணம் முடிகின்றது. ஆர்வமானது ஐரோப்பா நோக்கி மாறுகின்றது, மற்றும் கடைசியில் அது ரோமாபுரியில் மையம் கொள்ளும்.

## III. *மூன்றாம் பயணம்.*
## *(அப். 18:23-21:26.)*

***1. எபேசுவில் பவுலின் மூன்று ஆண்டுகள்.***—அந்தியோகியாவில் சில காலம் செலவிடப்பட்ட பின்பு, அம்மாபெரும் ஊழிய சபைக்கு கடைசிப் பிரியாவிடை கூறினார். தாக்குதலுக்கான அவரது அடுத்த முனை எபேசுவாக இருந்தது. இது மூன்றாம் பயணத்தில் ஆர்வத்திற்குரிய மையமாய் இருந்தது. அது நன்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது; சீரியாவுக்கு அந்தியோகியா எப்படியோ, கிரேக்கத்திற்கு கொரிந்து எப்படியோ, இத்தாலிக்கும் மேற்குக்கும் ரோமாபுரி எப்படியோ அப்படியே மேற்கு ஆசியா மைனரின் சுறுசுறுப்பான வாழ்வுக்கு எபேசு நகரம் அமைந்திருந்தது. பவுல் எபேசுவுக்குச் செல்லும் வழியில் கலாத்தியா பிரிகியா ஆகிய தம் முந்திய மார்க்கத்தினூடாக ஒரு துரிதப்பயணம் மேற்கொண்டார். கொரிந்துவிலிருந்து அவர் அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்த பயணத்தில் அவர் எபேசுவில் பொதுமக்களின் கருத்தை உணரப் போதுமான அளவுக்கு நீண்ட காலம் தங்கியிருந்து, ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாவையும் அங்கு விட்டுச் சென்றிருந்தார் என்பது நினைவுகூரப்படும். அவர் அங்கிராத

நிலையில் தயாரிப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்பொல்லோ என்னும் பெயருடைய சாதுரியவானான யூதர் ஒருவர் அலெக்சந்திரியாவில் இருந்து எபேசுவுக்கு வந்து சேர்ந்திருந்தார், அவர் யோவானின் ஞானஸ்நானத்தை மாபெரும் வல்லமையுடன் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவருக்கு சுவிசேஷத்தை இன்னும் பூரணமாய் அறிவுறுத்தினர். பிறகு அப்பொல்லோ கொரிந்துவுக்குக் கடந்து சென்று அங்கு பவுல் மிக வெற்றிகரமாய்த் தொடங்கியிருந்த ஊழியத்தைத் தொடர்ந்து செய்தார் (இ.வ. அப். 18:27; 1 கொரி. 3:4-7). பவுல் எபேசுவுக்கு வந்து மூன்று மாதங்கள் ஆன பின்பு ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார். கடைசியில் அவர் யூதர்களை விட்டுப் பிரிந்து போகும்படிக்குக் கட்டாயப்படுத்தப்பட்டு, கிறிஸ்தவர்களை ஒரு தனிப்பட்ட சமுதாயமாக அமைக்கும்படி வற்புறுத்தப்பட்டார். இரு ஆண்டுகள் காலத்திற்கு அவர், திறன்னு என்பவரின் பள்ளியில் அன்றாடம் போதித்து, ஆசியாவின் எல்லா மாகாணங்களிலும் இருந்த திரளான யூதர் களையும் கிரேக்கர்களையும் போதனையுடன் அணுகிக் கொண்டிருந்தார். தியானாள் என்ற பெண் தெய்வத்தின் கோயிலில் வெள்ளிச் சிறு கோயில் களில் விற்பனை வீழ்ச்சியடையுமளவுக்குப் பவுலின் பிரசங்கம் அவ்வளவு செயல் வலிவுள்ளதாயிருந்தது. வெள்ளிச் சிற்பாசாரிகளின் ஒரு கும்பலானது பவுலின் உயிரை அழிவுக்குட்படுத்தப் பார்த்தது. பவுல் எபேசுவில் சஞ்சரித்திருந்த இந்த நீண்ட காலத்தில் அவர் அநேகமாக கொரிந்துவுக்கும் சென்றிருக்கலாம் (2 கொரி. 12:14; 13:1). மேலும் அவர் கொரிந்தியருக்குத் தமது முதல் நிருபத்தையும் இங்கிருந்து (எபேசுவிலிருந்து) எழுதினார் (இ.வ. 1 கொரி. 16:5-9; அப். 19:20, 21; 20:1). அவர்களும் அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தனர் (1 கொரி. 7:1), மற்றும் அவரும் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார் (1 கொரி. 5:9). இவ்விரண்டும் நமக்கு வந்து சேரவில்லை.

***2. மக்கெதோனியா மற்றும் அகாயா பகுதியில் இரண்டாம் பயணம்.***—ஏஜியன் கடலை இன்னும் ஒருமுறை கடந்து சென்ற பவுல் ஐரோப்பாவிற்கு இரண்டாம் முறை பயணம் செய்தார், இதைப் பற்றிய சில விவரங்கள் மட்டுமே நாம் கொண்டுள்ளோம். மக்கெதோனியாவினூடான இந்தப் பயணத்தின்போது ஏதோ ஒரு வேளையில் 2 கொரி. நிருபம் எழுதப்பட்டது என்பது, 2 கொரி. 1:8-10 மற்றும் 2:12, 13 ஆகியவற்றை அப். 20:2 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தெளிவாகின்றது. கொரிந்துவைச் சென்று சேர்ந்த பவுல் அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்தார். அந்த வேளையில் அவர் ரோமருக்கு நிருபத்தை எழுதினார் (இ.வ. ரோமர் 15:25, 26; அப். 20:3, 4; 24:17), அநேகமாக இதை அவர் கெங்கிரேயாவைச் சேர்ந்த பெபேயாளின் மூலம் அனுப்பியிருப்பார் (ரோமர் 16:1). இந்த மூன்றாம் பயணத்தின்போது ஏதோ ஒரு வேளையில் அவர் கொரிந்து அல்லது முன்னதாக எபேசுவில் இருந்தபோது கலாத்தியருக்கு நிருபத்தையும் எழுதினார்.

***3. தர்ம சகாயம் சேகரித்தல்.***—யூதருக்கும் புறஜாதியாருக்கும் மத்தியி லிருந்த பிரிவினையாகிய நடுச் சுவர் இடிந்து வீழ்வதைக் காணும்படிக்குப் பவுல் ஏக்கம் கொண்டிருந்தார். இது அவரது இருதயத்தின் அருகில்

*கிடத்தப்பட்டிருந்த ஒரு முடிவாயிருந்தது. இதற்காக அவர் தமது வாழ்வையே அர்ப்பணித்தார். எருசலேமில் இருந்த ஏழை யூத சகோதரர்களுக்காக அவர் இப்பயணத்தில் புறஜாதியார்களாயிருந்த சகோதரர்களிடம் பணம் சேகரித்தது என்பது அவர் இதை (யூதர்-புறஜாதி என்ற பிரிவினையை) ஒழிக்கக் கையாண்ட ஒரு வழி முறையாய் இருந்தது. பல குறுகிய வசனப் பகுதிகள் இருக்க, 2 கொரிந்தியர் அதிகாரங்கள் எட்டும் ஒன்பதும் இதைப் பற்றியே எடுத்துரைக்கின்றன. இது கலாத்தியா, மக்கெதோனியா மற்றும் அகாயா நாடுகளில் சேகரிக்கப்பட்டது (இ.வ. 1 கொரி. 16:1-3; கலா. 2:10; ரோமர் 15:25, 26; அப். 24:17); இது வாரத்தின் முதல் நாளில் நடைபெற்றது (1 கொரி. 16:1); மற்றும் நேரடியாகவோ அல்லது நிருபத்தின் வாயிலாகவோ அவருடைய வேண்டுகோள்களுக்குக் கூடுதலாக அவர் அந்த நிதியைச் சேகரித்து, பெற்றுத் தருவதற்குத் தீத்துவையும் மற்றவர்களையும் பயன்படுத்தினார் (2 கொரி. 8:6, 18, 23; 1 கொரி. 16:3).*

***4. திரும்புகைக் கடற் பயணம்.***—*பவுல் கொரிந்துவிலிருந்து நேரடியாக சீரியாவுக்குக் கடற் பயணம் செல்லத் தீர்மானித்தார், ஆனால் யூதர்களின் விளக்கியுரைக்கப்படாத சூழ்ச்சியான திட்டம் ஒன்று அவர் மக்கெதோனியா வழியாகச் சுற்றிச் செல்லும்படி அவரை வழிநடத்திற்று. பழைய மற்றும் புதிய நண்பர்களின் நற்தோழமையொன்று மக்கெதோனியாவில் அவரைச் சேர்ந்து கொண்டது (அப். 20:4-6) அவர்களில் தீமோத்தேயுவும் லூக்காவும் இருந்தனர். இதில் பிந்தியவர் (லூக்கா) அநேகமாக பிலிப்பிக்கு சென்ற முதல் பயணத்திலிருந்து அங்கேயே தங்கியிருந்திருக்கலாம் (அப். 16:10, 13, 40; 20:6 ஆகியவற்றில் "அவர்கள்," "நாங்கள்" என்ற வார்த்தைகளின் பயன்பாட்டை ஒப்பிட்டுக் காணவும்). அக்குழுவினர் துரோவாவில் ஒரு வாரம் தங்கியிருந்து வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்குதலுக்கு வந்த சீஷர்களுடன் கூடி(ஆராதித்த)னர் (அப். 20:7). இவ்வசனப் பகுதியானது (1) சீஷர்கள் (பந்தியை) கடைப்பிடித்த நாளை; (2) அதைக் கடைப்பிடித்த விதத்தைக் காண்பிக்கும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இங்கு பவுல் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் சன்னலில் இருந்து தவறி விழுந்து இறந்த ஐத்திகுவை உயிரோடெழுப்பினார். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக எருசலேம் சென்று சேர வேண்டுமென்று துரிதப்பட்ட பவுல் எபேசுவில் நிற்கவில்லை, ஆனால் மிலேத்துவில் இருந்து கொண்டு எபேசு சபையின் மூப்பர்களை வரவழைத்து அங்கு தமது எல்லா உரைகளிலும் மிகவும் அழகு வாய்ந்த உரையொன்றை அவர்களுக்கு ஆற்றினார். இது அவர்கள் தொட்ட இடங்கள் எதுவாயிருப்பினும் அங்கு அவர்கள் சீஷர்களைக் கண்டறிந்த வேளையாக, சுவிசேஷம் துரிதமாய்ப் பரவும் வேளையாக இருந்தது: துரோவா, மெலித்தா, தீரு, பித்தொலமாய், இங்கு கடல் பயணம் முடிந்து போனது, மற்றும் செசரியா. இங்கு நாம் நமது பழைய நண்பரான பிலிப்புவைச் சந்திக்கின்றோம் (இ.வ. அப். 8:40), இவர் ஏவுதல் பெற்ற போதகர்களாய்/தீர்க்கதரிசினிகளாய் இருந்த நான்கு மகள்களைப் பெற்றிருந்தார். தீருவிலும் செசரியாவிலும் பவுல் அவருக்கு எருசலேமில் காத்திருந்த அபாயங்கள் பற்றி எச்சரிக்கப்*

பட்டார்; ஆனால் அவைகளில் ஏதொன்றும் அவரை கடந்த நான்காண்டு களாக புறஜாதியாரிடம் சேகரிக்கப்பட்டிருந்த நிதியை/சமாதான காணிக்கையை யூதருக்களிக்க எருசலேம் செல்லுவதைத் தடைப் படுத்தவில்லை.

***5. எருசலேமில் பவுலுக்கு வரவேற்பு.***—இப்பொழுது பவுல் மனமாற்றம் அடைந்து இருபது (score) ஆண்டுகள் ஆகியுள்ளன. அவர் பன்னிரு ஆண்டுகளாக, மாபெரும் புறஜாதியார் மையங்களில் சபையை நிலை நாட்டுதலில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தார். இரண்டு அல்லது மூன்று முறை அவர் எருசலேமுக்கு அவசரப் பயணமாய் வந்திருந்தார். பன்னிரு ஆண்டுகள் கழிந்த பிறகு தீத்து[4] எருசலேமின் மதில்களை இடித்து வீழ்த்தவிருந்தார். மீண்டும் ஒருமுறை பவுல் வருகின்றார்; இவ்வேளையில் ஒரு இரட்டைக் காணிக்கையுடன்-புறஜாதி கிறிஸ்தவர்கள் அளித்திருந்த தர்மப் பணம் மற்றும் அந்தக் கொடையை ஏவியிருந்த கிருபையின் சுவிசேஷம். அவர்கள் அவரை எவ்விதம் ஏற்றுக்கொள்வார்கள்? யாக்கோபின் கீழ் எருசலேம் சபையின் நடத்துனர்கள் அவருக்கு மனம் குளிர்ந்த வரவேற்பை அளித்தனர். ஆனால் எங்கும் நடந்தது போல் அங்கும் அவர்மீது பழி தூற்றப்பட்டது. தப்பெண்ணங்களை அமைதிப்படுத்து வதற்காக அவர் யாக்கோபின் அறிவுரைக்கு இணங்குகின்றார், ஒரு பொருத்தனை தொடர்பான குறிப்பிட்ட சில சமயச் சடங்குகளைக் கடைப்பிடிக்கின்றார். இது சபையில் எவ்வாறு வெற்றியடைந்தது என்பதை லூக்கா நமக்குக் கூறுவதில்லை. இது அவிசுவாசிகளான யூதரிடத்தில் தோல்வியடைந்தது, மற்றும் பவுல், தாமே ஸ்தேவானைக் கொல்லத் தலைமையேற்று நடத்திய அந்தக் கூட்டத்தைப் போன்ற கும்பல் ஒன்றினால் விரைவில் தேவாலயத்தில் சுற்றி வளைக்கப்பட்டார்.

---

குறிப்புகள்

[1]அப். 13:2. [2]அப். 16:9. [3]அப். 17:2. [4]டைட்டஸ் ஃபிளேவியஸ் வெஸ்பாஸியானஸ் என்பவர் ரோமாபுரியில் ஆண்ட பேரரசர் ஆவார்.